# பாலியல் இலஞ்சத்திற்கு உள்ளாகும் இராணுவக் கணவரை இழந்த பெண்கள்

## அனுராதபுரம், குருநாகல் மற்றும் காலி மாவட்டங்கள்

- சுருக்கவுரைப் பத்திரம் -



Centre for Equality and Justice

©சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், இலங்கை
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

வடிவமைப்பு: ஜேமி அல்போன்ஸஸ்
புகைப்படங்கள்: ஷார்னி ஜயவர்தன
படமூல: google.com

அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது ஆகஸ்ட் 2017
ஓபன் சொஷைட்டி பௌன்டேஷனினால் (Open Society Foundations) இந்த செயற்றிட்டத்திற்கு நிதியளிக்கப்பட்டுள்ளது.

பிரசுரத்தில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் நேர்காணப்பட்ட நபர்களின் கருத்துக்களாகும். இவை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் கொள்கைகளையோ கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. இந்த பிரசுரத்தின் எந்த பகுதிவும் ஆதாரமின்றி மீள்பிரதி செய்யப்படவோ, மீட்டெடுப்பு முறைமையில் சேமிக்கப்படவோ அல்லது இலத்திரனியல், இயந்திரமுறை, ஒளிப்பதிவு நகலாயுதம் என எந்த வடிவத்தின் மூலம் பரிமாற்றம் செய்யப்படவோ முடியாது.

*மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ளவும்:*
சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்
325 ஏ1, திம்பிரிகஸ்யாய வீதி கொழும்பு 05. இலங்கை.
தொலைபேசி/ தொலைநகல்: 94 11 2055404

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 2 |
| பாலியல் இலஞ்சத்தின் சட்ட மற்றும் அரசியலமைப்புசார் விளைவுகள் | 3 |
| முறையியல் | 4 |
| இராணுவக் கணவரை இழந்த பெண்களின் விபரங்கள் | 7 |
| முடிவுகளின் பகுப்பாய்வு | 9 |
| பரிந்துரைகள் | 14 |


* பாலியல் இலஞ்சத்திற்கு உள்ளான போரினால் பாதிக்கப்பட்ட சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லீம் பெண்களின் தொடர் ஆய்வுகளில் இது இரண்டாவது ஆய்வறிக்கை ஆகும்.



# அறிமுகம்

இலங்கையில் தற்போது ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள இராணுவக் கணவரை இழந்தப் பெண்கள் உள்ளனர். இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் உள்ளடங்கலாக ஆயுதப்படையில் சேவையில் இருந்ததன் நேரடி விளைவு ஒன்றினால் தமது கணவரை இழந்த பெண் ஒருவர் "இராணுவக் கணவரை இழந்த பெண்" என அறியப்படுகின்றார். இலங்கையில் இராணுவ செயற்பாடுகளின்போது காணாமல் போனவர்கள் (MIA- Missing in Action) பெரும் எண்ணிக்கையில் உள்ளமையால், இவர்களின் மனைவியரும், மாற்றுத்திறனடைந்த பாதுகாப்புப் படையினரின் மனைவியரும் "இராணுவக் கணவரை இழந்த பெண்கள்" என்ற வகையின் கீழ் உள்ளடக்கப்படுகின்றனர். இந்த மூன்று சூழ்நிலைகளின் காரணமாக குடும்பத் தலைவர்களாகவும், குடும்பத்தின் அனைத்து சமூக-கலாசார மற்றும் அரசியல்-பொருளாதார பொறுப்புக்களையும் சுமப்பவர்களாகவும் பெண்கள் மாற்றப்பட்டனர்.

> முறைப்பாட்டினை முன்வைக்கும் பெண்ணே, அத்தகைய பாலியல் விருப்பங்களை நாடியதாக குற்றச் சாட்டிற்கு உள்ளாவாதனை நான் அவதானித்திருக்கின்றேன்.

குடும்பத்தில் ஆண்கள் இன்மையின் காரணமாக, பாலியல் தொந்தரவு, பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சம் என்பவற்றினால் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாக பெண் குடும்பத் தலைவிகள் உள்ளமையை பல தசாப்தங்களாக முன்னெடுக்கப்பட்ட விரிவான ஆராய்ச்சி தெளிவாக காட்டுகின்றது. அநேக தருணங்களில் இப்பெண்களின் பொருளாதார நிலைத்திருப்பு மற்றும் சமூக-அரசியல் அந்தஸ்து என்பனவற்றிற்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை பெற்றுக்கொள்ள அரச பிரதி நிதிகளின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. இந்நிலை மறுபுறத்தில் அவர்கள் மேலும் இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய தன்மையினை அதிகரிக்கின்றது.

'வீழ்ந்த மாவீரர்களின்' வாழ்க்கைத் துணையினர் என்ற அடிப்படையில் சமூகத்தில் முன்னுரிமையளிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவர்களாக இராணுவக் கணவரை இழந்த பெண்கள் இருக்க வேண்டிய போதிலும், அவர்கள் ஒதுக்கப்பட்டு சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஆயினும் அவர்களின் பாதிப்புநிலை, சிறுபான்மை சமூகத்தினரைச் சேர்ந்த் கணவரை இழந்த பெண் குடும்பத் தலைவிகளை விட குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. வடமாகாணத்தில் யுத்தத்தால் கணவரை இழந்த தமிழ் மற்றும் முஸ்லிம் பெண் குடும்பத் தலைவிகள் போன்றே, பெரும் எண்ணிக்கையிலான இராணுவக் கணவரை இழந்த பெண்களும், தமது கணவரின் சம்பளங்களிற்கு விண்ணப்பிக்கும் போதும், வங்கிக் கடன்களுக்கு விண்ணப்பிக்கும்போதும், ஆவணங்களை சான்றுபடுத்தும்போதும், தமது பிள்ளைகளை பாடசாலைக்கு சேர்க்கும்போதும், இராணுவத்திடமிருந்தும், பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் தொடர்ச்சியாக பாலியல் பலாத்காரத்தை எதிர்கொள்வதாகவும், பாலியல் இலஞ்சம் மற்றும் ஏனைய வகையிலான பாலியல் சுரண்டல்களுக்கு வற்புறுத்தப்படு-வதாகவும் முறைப்பாடு செய்தனர்.

பாலியல் சுரண்டல் என்பதற்கான ஐக்கிய நாடுகளின் வரைவிலக்கணத்தில் 'ஏனையோரினால் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படலுடன், நிதிசார், சமூகம் சார் அல்லது அரசியல்சார் பயனுக்காக மாத்திரமல்லாது பாலியல் நோக்கங்க ளுக்காக 'பாதிக்கப்படும் தன்மை, மாறுபாடான அதிகாரம், அல்லது நம்பிக்கை' என்பவற்றை துஸ்பிரயோகம் செய்தல் அல்லது செய்ய முயற்சித்தல் என குறிப்பிடுகின்றது. சன்மானங்கள், உதவிகள் அல்லது எந்தவொரு வகையான சேவைகளையும் வழங்குவதற்குப் பதிலாக பாலியல் நடத்தையினை முயற்சிக்கும் பாலியல் சுரண்டலின் ஒரு குறிப்பிடத்தக்க வடிவமாக

இந்த ஆய்வுக்கற்கை இலங்கையில் பாலியல் இலஞ்சத்தை அடையாளப்படுத்துவதற்கான சட்ட மற்றும் அரசியலமைப்பு வரைபுநகலின் மேலோட்டமான பார்வை ஒன்றினை வழங்கு-வதுடன், குறிப்பாக ஆபத்தில் உள்ள சூழ்நிலைகளை சுட்டிக்காட்டுவதற்காக குருநாகல், அனுராதபுரம் மற்றும் காலி மாவட்டங்களில் வசிக்கும் சிங்கள இராணுவக் கணவரை இழந்த பெண்களின் பத்து சம்பவக் கற்கைகளை கலந்துரையாடுகின்றது.

> "நள்ளிரவில் யார் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வருவார்கள்" என நான் சத்தம் போட்டேன்.

# பாலியல் இலஞ்சத்தின் சட்ட மற்றும் அரசியலமைப்புசார் விளைவுகள்


- பொது அதிகாரிகள் இலஞ்சம் வாங்குவது இலங்கையின் சட்டத்தை மீறுவதாகும். துரதிஷ்டவசமாக தனியார் நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் இந்த சட்டங்களுக்குள் உள்ளடங்குவதில்லை. அதனால், அவர்களை இலஞ்ச சட்டத்தின் கீழ் தண்டிக்க முடியாதுள்ளது. ஏனைய பிரயோகிக்கக் கூடிய சட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தனிநபர்கள் உள்ளடங்குகின்றனர்.
- இலஞ்ச சட்டத்தில் பாலியல் இலஞ்சம் என்பது விசேடமாக குறிப்பிடப்படாத போதிலும், 'மன நிறைவுக்காக வழங்குதல்' என்பது 'எந்தவொரு உதவியோ அல்லது எவ்வகை-யான வரைவிலக்கணப்படுத்தக்கூடிய அனுகூலங்களை பெறுதலோ' என விளங்கப்-படுத்தலினால், பாலியல் விருப்புக்களை உள்ளடக்கியதாக விளக்கப்பட முடியும்.
- 'மனநிறைவுக்கு வழங்குதல்' என்ற பதமானது பணம்சார்ந்த மனநிறைவுக்காக வழங்கல் அல்லது பணத்தினால் மதிப்பிடக் கூடிய மனநிறைவுக்காக வழங்குதலுக்கு மட்டுப்படுத்தப்பட்டது அல்ல என இலங்கை குற்றவியல் கோவை வலியுறுத்துகின்றது. எனவே, பாலியல் இலஞ்சம் இதில் உள்ளடங்கியிருப்பதாகவும் அதனை உரைவிளக்க முடியும்.
- பால் சார்ந்த எந்தவொரு வன்முறையும் அடிப்படை உரிமைகள் மீறலாகும் என்பதால், இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்திற்குள் இலஞ்சத்தின் பாலியல்சார் வடிவங்கள் உள்ளடங்குகின்றன.

- அரசின் நிறைவேற்று அல்லது நிர்வாக கிளையைச் சேர்ந்தவர்களின் அத்தகைய நடவடிக்கை ஒன்றினை முன்னெடுக்கும் தரப்பு தொடர்பில் நிபந்தனை செய்யப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் இங்கு குறிப்பிடப்படவில்லை.

# முறையியல்

- இலங்கையின் மூன்று வேறுபட்ட மாவட்டங்களிலிருந்து (குருநாகல் - வடமேல் மாகாணம், அனுராதபுரம் - வடமத்திய மாகாணம், மற்றும் காலி - தென் மாகாணம்) பல்வேறு தடவைகள் பாலியல் இலஞ்சம் போன்ற பாலியல் வன்முறைகளை அனுபவித்த இராணுவ விதவை குடும்பங்களிலிருந்து பத்து பெண்களை மையமாக கொண்டு இந்த ஆய்வுக்கற்கை நடாத்தப்பட்டது.
- அதிக எண்ணிக்கையிலான இராணுவக் கணவரை இழந்த பெண்கள் குருநகால் மாவட்டத்திலும் (28%), அதனைத் தொடர்ந்ததாக அனுராதபுரத்திலும் (25%) வசிக்கின்றனர் எனக் கண்டறியப்பட்ட முந்தைய ஆய்வின் அடிப்படையிலேயே இந்த மூன்று மாவட்டங்களும் தெரிவு செய்யப்பட்டன.
- மூன்றாவது ஆகக்கூடிய இராணுவக் கணவரை இழந்த பெண்கள் வசிக்கும் மாவட்டமாக கண்டி (19%) இருந்தது. எனினும், கற்கை முன்னெடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு மே மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் நாட்டில் நிலவிய மோசமான காலநிலையின் காரணமாக கற்கையில் இருந்து அது நீக்கப்பட்டு, 13 வீதமான இராணுவக் கணவரை இழந்த பெண்கள் வசித்த காலி மாவட்டம் தெரிவு செய்யப்பட்டது (Ibid).
- குருநாகல் மாவட்டத்தில் வசித்து வந்த அனுபவம் வாய்ந்த ஆய்வாளர் ஒருவரினால் சிங்கள மொழி மூலம் சம்பவக்





> அதிகாரத்தில் உள்ள ஆண்களினால் இவ்வாறான தொந்தரவுகளை எதிர்கொள்வது பலவீனமான, ஒதுக்கப்பட்ட பெண்களின் சோகமான யதார்த்தம் என நான் நினைத்திருந்தேன்.

கற்கைகளுக்கான அனைத்து நேர்காணல்களும் முன்னெடுக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் நேர்காணப்பட்ட இராணுவக் கணவரை இழந்த பெண்களுடன் நீண்ட நாள் தொடர்பு மற்றும் நட்பில் இருந்த உள்ளூர் செயற்பாட்டாளர் ஒருவருடன் நேர்காணல்களிற்காக ஆய்வாளர் சென்றார். நேர்காணப்படுபவர்களின் நம்பிக்கை மற்றும் மனவுறுதியை உறுதி செய்வதற்கு இது அத்தியாவசியமாக இருந்தது.

- விளக்கமான வினாக்கொத்து ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தாலும், நேர்காணலில் உள்ளடக்கப்பட வேண்டிய கருப்பொருள்சார் விடயங்களை பூர்த்தி செய்வதை உறுதிசெய்யும் ஒரு வழிகாட்டியாகவே ஆய்வாளரினால் அது பயன்படுத்தப்பட்டது. ஏனெனில் சம்பவக் கற்கைகளுக்கு தரவுகளை சேகரிப்பதற்கான பயன்மிக்க முறையாக திறந்தவகை உரையாடல்கள் அமையும் என்பதனை அவர் நன்கு அறிந்திருந்தார்.

- அநேக தடவைகளில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும், பாலியல் இலஞ்சம் குறித்த மேலதிக விளக்கங்களை வெளிக்கொணர்வதற்கும், நேர்காணப்படுபவர் ஒருவரிடம் ஒரு தடவைக்கும் மேற்பட்ட சந்திப்புக்கள் நடைபெற்றது.

- ஏனைய சிங்கள பெண் தலைமைதாங்கும் குடும்பத் தலைவர்கள் மற்றும் தமிழ், முஸ்லீம் பெண் தலைமைதாங்கும் குடும்பத் தலைவர்களைப் போலன்றி, இராணுவக் கணவரை இழந்த பெண்கள் இராணுவத்துடனும் அதன் நீட்டிப்பாக அரசினுடனும் தெளிவாக, நேரடியாக தங்கியுள்ள உறவு முறையை கொண்டுள்ளனர். ஏனெனில் தமது பிரதான வாழ்வாதார மூலமாக இறந்த தமது கணவரின் சம்பளத்தை அல்லது இராணுவ ஓய்வூதி-யத்தை முழுமையாக அல்லது பகுதியளவில் பெறுகின்றனர். இது ஆய்வு செயற்றிட்டம் முழுவதும் நினைவில் வைத்திருக்க வேண்டியிருந்த மற்றுமொரு முக்கியமான அம்சமாகும்.

- இராணுவக் கணவரை இழந்த பெண்கள் சம்பளம் அல்லது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு பல்வேறு நிர்வாக மட்டங்களில் இராணுவ அலுவலகப் பணியாளர் மற்றும் அரச அதிகாரிகளுடன் ஒத்துழைப்பு மற்றும் நல்லெண்ணத்தை பேண வேண்டியது முக்கியமாக இருக்கின்ற நிலையில், இந்தப் பணியாளர்களே அவரிடம் பாலியல் ரீதியான கோரிக்கைகளை விடுப்பதற்கான வாய்ப்பும் அதிகளவில் உள்ளது. இதனால் இந்த விடயம் தொடர்பில் முறைப்பாடு ஒன்றினை செய்வ-தற்கோ கதைப்பதற்கோ இந்தப் பெண்கள் பெரும் அச்சம் மற்றும் தயக்கத்தை கொண்டுள்ளனர்.

- பழிவாங்குவார்களோ என இராணுவக் கணவரை இழந்த பெண்கள் அச்சம் கொண்டிருந்ததனால் கற்கைக்காக 15 பெண்கள் நேர்காணப்பட்ட போதிலும், தமது சம்பவக் கற்கைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்க வேண்டாம் என 5 பேர் கேட்டுக்கொண்டனர்.

- சம்பவக் கற்கைகளை உள்ளடக்கவதற்கு இணக்கம் தெரிவித்த பெண்கள், பாலியல் குற்றங்களைச் செய்தவர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட வேண்டாம் எனவும் பாலியல் குற்றம் புரிந்தவர்கள் பணியாற்றும் இராணுவ முகாம் அல்லது அரசாங்க அலுவலகத்தின் பெயர்கள் குறிப்பிடப்பட வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டனர்.

- மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளுக்கு மதிப்ப ளிக்கப்பட்டு, புனைப்பெயர்கள் பயன்படுத்து வதன் மூலம் நேர்காணப்பட்டவர்களின் அடையாளம் மறைக்கப்படுவதற்கும், அவர்கள் வதியும் கிராமங்கள் அல்லது மாவட்டங்களை பட்டியலிடாதும் இருப்பதற்கும் விசேட அக்கறை எடுக்கப்பட்டது.

- மனித உரிமைகள் ஆணைக்குழவில் முறைப்பாடு செய்வதற்கும், தாம் முன்வைத்-துள்ள முறைப்பாட்டினை பின்தொடர்வதற்கும், சட்ட வழியைத் தொடரும் விருப்பம் இருப்பின் தொடர்வதற்கும் அல்லது உளச்சமூக உளவளத்துணையைப் பெறுவதற்கும் எந்தவொரு நேர்காணப்படுபவருக்கும் தகவல் மற்றும்/அல்லது ஆதரவினை வழங்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டது.

> “என்னுடைய கணவரும் இராணுவத்தில் இருந்தார். எனவே, எவ்வாறு இராணுவத்தின் இந்த தகாத அம்சங்களை பிரசுரிப்பது?”

# இராணுவக் கணவரை இழந்த பெண்களின் விபரங்கள்

- இந்தப் பெண்களில் பெரும்பாலானவர்கள் தமது கணவரை இழந்த போது மிக இளவயதினராகவும், பெரும்பாலும் தம்மில் தங்கியுள்ள சிறு பிள்ளைகளையும் கொண்டிருந்தனர்.
- இப்பெண்களின் சிலர் தமது பெற்றோருக்கு ஆதரவு வழங்குவதோடு, ஒரு பெண் தன் கணவரின் சம்பளத்துடன் தன்னுடைய சிறு பிள்ளைகள் மட்டுமல்லாமல் இரு சகோதரங்களையும் ஆதரிக்க வேண்டியிருந்தது
- உயிரிழந்த தமது கணவரின் சம்பளத்தைப் பெறுவதற்கு பல மாதங்களுக்கு இராணுவக் கணவரை இழந்தப் பல பெண்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. அதுவரை, தமது பெற்றோர்களில் அல்லது கணவரின் குடும்பத்தினரில் அவர்கள் தங்கியிருந்தனர். பெரும்பாலும் கணவரின் குடும்பத்தினர் அவர்களை கொடூரமாக நடத்தினர்.

> “நாம் மிகுந்த சுதந்திரத்துடன் தற்போது வாழ்கின்றோம். ஏனெனில், எம்மில் அதிகாரம் செலுத்த ஆண்கள் எவரும் இல்லை.”

- தமது கணவரின் 75 வீத சம்பளத்தை மாத்திரமே இரண்டு பெண்கள் பெறுகின்றனர். அதில் 25 வீதமானது அவர்களது கணவரின் பெற்றோருக்கு செல்கின்றது. இப்பெண்களின் ஒருவர் இந்த தொகுதியினைப் பெறுவதற்கு ஐந்து வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.
- இந்தப் பெண்களில் பெரும்பாலானோர் மிக அடிப்படையான கல்வியினை கொண்டிருந்த துடன், திறன்கள் எதனையும் கொண்டிருக் காமையால், நிலையான வேலைவாய்ப்பு வடிவங்களை பெறமுடியாதிருந்தது.
- ஒரு பெண்ணைத் தவிர, ஏனைய அனைத்துப் பெண்களும் வேலையின்றி இருப்பதுடன், முழுமையாக மாதாந்தம் ரூ. 10,000 முதல் 50,000 வரையான தமது கணவரின் சம்பளத்திலேயே தங்கியிருக்கின்றனர்.
- தமது கணவரின் சம்பளத்தை இழக்க நேரிடும் என்பதால் பெரும்பாலான பெண்கள் மீள திருமணம் செய்து கொள்ளாது தனியாகவே வாழ்கின்றனர்.
- பெரும்பாலான பெண்கள் தமது கணவர் பெற்ற அல்லது தமது வீட்டினை கட்டுவதற்காக தாம் பெற்ற கடன் சுமையுடன் வாழ்கின்றனர்.
- எவ்வாறாயினும் பெரும்பாலான பெண்கள் தமக்கான சொந்த வீட்டினை அல்லது குடிசையை அமைத்து தமது பிள்ளைகளுடன் சுதந்திரமாக வாழ்ந்து வருவதுடன் வயதான பெற்றோர்கள் அல்லது ஏனைய உறவினர்களுக்கும் ஆதரவு வழங்குகின்றனர்.

> “விஷம் அருந்தி தற்கொலை செய்து கொள்ளவும் முயற்சித்தேன்”



"மிகவும் கனிவுள்ள மனித நேயம் படைத்தவர் என்ற தோற்றத்தை வெளியுலகிற்கு அவர் காட்டுவதாலும், என்னுடைய உறவினராக இருந்தமையாலும் அயலவர்கள் யாரும் அவர் மீது சந்தேகம் கொள்ளவில்லை."

- பெரும்பாலான பெண்கள் தாம் தனிமையாக வாழ்வதாகவும், அன்பு மற்றும் தோழமைக்காக ஏங்குவதாகவும் குறிப்பிட்டனர்.
- அரசு மற்றும் இராணுவ ஊழியர்கள் மாத்திர-மன்றி, தமது சக ஊழியர்கள், அயலவர்கள். உறவினர்கள், மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் பௌத்த பிக்கு ஒருவர் என நாளாந்த அடிப்படையில் தாம் எதிர்கொள்ள வேண்டிய பாலியல் சுரண்டலகள் தொடர்பில் அவர்கள் விரக்தியுடன் பேசினர்.
- தாம் மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளதாக ஏழு பேர் குறிப்பிட்டதுடன், அவர்களின் உளச்சமூக நலன் மிகவும் பலவீனமானதாக இருந்தது. இந்த குழுவில் நான்கு பேர் தற்கொலை செய்து கொள்ளும் உணர்வை கொண்டிருந்ததாகவும், அவர்களில் ஒருவர் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த-தாகவும், மனநல சிகிச்சை பெற நேர்ந்த-தாகவும் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் மருந்து உட்கொண்டு வருகின்றார்.



# முடிவுகளின் பகுப்பாய்வு

- ஆணாதிக்கமான மற்றும் பெண்களை போதியளவு மதிக்காத அல்லது மரியாதை செலுத்தாத இலங்கை சமூகம் என்ற பரந்த சூழ்நிலையின் அடிப்படையில் பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சத்தின் பல்வேறு வடிவங்கள் புரிந்துகொள்ளப்படல் வேண்டும். 'சமூக சேவை நடவடிக்கைகளிலும், அரசியல் நடவடிக்கைகளிலும் நான் ஈடுபட்டுள்ளேன். ஆனால், நீங்கள் செய்யும் பணிக்காக ஆண்கள் உங்களை பாராட்டு-வதில்லை. அவர்களுடைய பார்வையில் நீங்கள் வெறுமனே பாலியல் பொருட்கள்' என குறிப்பிட்டு சுருக்கமாக ஒரு பெண் விளக்கினார்.

- கணவரை இழந்த பெண்களையும், தனியாக வாழும் பெண்களையும் பலவீனமானவர்களாக, வளைந்து கொடுப்பவர்களாக மற்றும் பாலியல் செயற்பாட்டிற்கு தயாரானவர்களாக ஆண்கள் கருதுவது இலங்கை சமூகத்தின் அனைத்து படிநிலைகளிலும் ஒரு பொதுவான தோற்றப்பாடாக உள்ளது. பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள இராணுவக் கணவரை இழந்த பெண்கள் மற்றும் தனியாக வாழும் பெண்கள், அரச மற்றும் இராணுவ அமைப்புக்-களிடம் இருந்து சேவைகளை நாடுதல் போன்ற வலு வித்தியாசங்களுள்ள சூழ்நிலைகளில் அது மேலும் பாதிப்படைகின்றது.

- பாலியல் இலஞ்சத்தின் பல்வேறு சூழ் நிலைகளை பல பெண்கள் எதிர்கொண்டுள்ளனர். அவர்கள் எதிர்நோக்கிய பல்வேறு பாலியல் ரீதியாக சுரண்டல் சூழ்நிலைகள் முடிவடைந்து அல்லது சாதுரியமாக அவற்றிலிருந்து தப்பிய போதிலும், ஒருசில அச்சுறுத்தல்கள் தொடர்ந்துகொண்டுள்ளன. இன்னும் ஒருசில பாலியல் சுரண்டல்கள் தொடந்து கொண்டுள்ளன.

- தாம் எதிர்கொண்ட பாலியல் இலஞ்ச சம்பவம் தொடர்பில் நண்பர் ஒருவருக்கு அல்லது உறவினருக்கு பல பெண்கள் இரகசியமாக தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், மூன்று இராணுவக் கணவரை இழந்த பெண்களுக்கு வெளிநபர் ஒருவருடன் இது குறித்து கதைத்த முதல் சந்தர்ப்பம் இதுவேயாகும்.

- நேர்காணப்பட்டவர்களால் குறிப்பிடப்பட்ட பாலியல் இலஞ்சம் சம்பந்தப்பட்ட 16 சம்பவங்களில், இரண்டு இராணுவக் கணவரை இழந்த பெண்கள் மாத்திரமே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும், இராணுவ முகாம் ஒன்றில் உள்ள கட்டளை அதிகாரியி-டமும் முறைப்பாட்டினை செய்துள்ளனர். கணவரை இழந்த பெண்ணொருவரின் தாய் நேரடியாக மகளின் பாலியல் குற்றம் புரிந்தவரை எதிர்கொண்டுள்ளார்.

- முறைப்பாடுகள் எவையும் சிரத்தையுடன் எடுத்துக் கொள்ளப்படாமையும், குற்றமிழைத்-தவர்களுக்கு தண்டனையளிக்கப்படாமையும் கணவரை இழந்த பெண்கள் மேலும் ஏமாற்றம் கொள்ள காரணமாக அமைந்தன. குற்ற மிழைத்தவரை நேரடியாக எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில், அது மேலதிக மறுத்தல் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்கு காரணமாகி, கணவரை இழந்த பெண்ணின் மனநிலை மேலும் பாதிக்கப்பட்ட வழிவகுத்தது.

- பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சம் கோரல் என்பன இராணுவக் கணவரை இழந்த பெண்களில் பெரும் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. சம்பவத்தின் போதும், அதன் பின்னரும், வெறுப்பு, அவமானம், துயரம், கோபம், ஏமாற்றம் போன்ற உணர்வுகளை தாம் அனுபவித்ததாக நேர்காணப்பட்டவர்கள் கூறினர். ஒருவருக்கு தற்கொலை செய்து கொள்ளும் எண்ணமும் தோன்றியுள்ளது.

- இந்தப் பெண்களுக்கு பாலியல் இலஞ்ச நிபந்தனைகளை தவிர்ப்பதற்கு பெற்றோர், சகோதரர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் முக்கியமாக ஆதரவளித்துள்ளனர். அவர்கள் இரக்கத்துடன் செவிமடுத்துள்ளனர், ஆலோ-சனை வழங்கியுள்ளனர், பாதுகாத்துள்ளனர், பாலியல் குற்றம் புரிந்தவர்களை எதிர்த்து கூட உள்ளனர்.

> “ஒட்டுமொத்த ஆண் இனம் மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்கள் எம்மை தொந்தரவுக்கு உள்ளாக்கினர்.”

- சில பெண்கள் திடமனத்தாலும் தனது உள்ளக பலத்தாலும் பாலியல் வேட்கைக்கு எதிராக போராடியுள்ளனர். தாம் எதிர்கொள்ள வேண்டிய நடத்தை கோலங்களை நன்கு புரிந்துகொண்டு அவற்றை சமாளிக்க மனித உரிமைகள் செயலமர்வு ஒன்றிலும் ஒரு பெண் பங்குபற்றியுள்ளார்.

**குற்றம் ரிந்தவர்கள் / குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்**

பாலியல் குற்றம் புரிந்தவர்களில் பெரும்பாலானோர் அரசின் பிரதிநிதிகளாகும்:

- இராணுவ வீரர் (5 சம்பவங்கள்)
- மாவட்டச் செயலகத்தில் பணியாற்றுபவர்கள் (3 சம்பவங்கள்)
- பொலிஸ் அதிகாரி (2 சம்பவங்கள்)
- அரச வங்கியின் முகாமையாளர் (2 சம்பவங்கள்)
- கிராம சேவகர் (1 சம்பவம்)
- தேசிய பாடசாலை ஒன்றின் அதிபர் (1 சம்பவம்)
- தபால் அதிபர் (1 சம்பவம்)

**பாலியல் குற்றம் புரிந்த தனியார் நபர்களில்:**

- மூவர் இராணுவத்துடன் சம்பந்தப் பட்டவர்கள், 2 உறவினர் உள்ளடங்க லாக (ஒருவர் தற்போது பணியாற்றுபவர், மற்றும் ஒருவர் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்) மற்றும் யுத்த வீரர்கள் அமைப்பின் தலைவரான அங்கவீனமான இராணுவ வீரர் ஒருவர்.
- மற்றைய தனியார் நபர் வீதி ஒப்பந்ததாரர்

சம்பவக் கற்கைகளில் குறிப்பிடப்பட்ட பல்வேறு அதிகாரிகள் ஏற்கனவே பாலியல் குற்றம் புரிந்தவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், அவர்களுக்கு எதிராக எவ்வித உத்தியோகபூர்வ முறைப்பாடுகளும் முன்வைக்கப்படவில்லை. எனவே, அவர்கள் சிறிதும் பாதிப்பின்றி தமது பாலியல் குற்றச் செயலை தொடர்ந்தனர். சில அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்த போது சிரேஷ்ட அதிகாரிகள் குற்றச்சாட்டினை சாதாரணமாக எடுத்துக் கொண்டு, அவர்கள் சார்பில் வருத்தம் தெருவித்தனரே தவிர அவ்விடயத்துக்கு மேலதிக கவனத்தை வழங்கவில்லை.

“ஒட்டுமொத்த ஆண் இனம் மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்கள் எம்மை தொந்தரவுக்கு உள்ளாக்கினர்.”

**பாலியல் இலஞ்சத்திற்கு வழிகோலிய சூழ்நிலைகள்**

- பாலியல் வேட்டைக்கு இவர்களை ஆளாக்கக் கூடிய, இந்த கணவரை இழந்தப் பெண்களின் வாழ்க்கை சார்ந்த பரந்த சூழ்நிலையின் அடிப்படையில் பாலியல் இலஞ்சம் என்பது புரிந்துகொள்ளப்படல் வேண்டும்.
- இந்த கணவரை இழந்த பெண்கள் அனைவரும் தமது கணவரின் சம்பளத்தில் தங்கியுள்ளனர். இந்த சம்பளத்தைப் பெறுவதற்காக ஆவணச் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு அவர்கள் நாடிய போதே மூன்று பாலியல் இலஞ்ச சம்பவங்கள் நடந்துள்ளன
- தமக்காகவும், தமது பிள்ளைகளுக்-காகவும் வீடு ஒன்றை கட்டுவது அல்லது தமது கணவர்மாரினால் ஆரம்பிக்கப்பட்ட வீடமைத்தல் பணியை / புனரமைத்தல் பணியை நிறைவு செய்வதே பெரும்பாலான இராணுவக் கணவரை இழந்த பெண்களின் பிரதான குறிக்கோளாக இருந்தது. இதற்காக இராணுவத்திடம் அல்லது அரச வங்கி ஒன்றிடம் அவர்கள் வீடமைப்பு கடன் பெறுவதற்காக நாடியதே அதிக எண்ணிக்கையிலான பாலியல் இலஞ்ச சம்பவங்களுக்கு காரணமாகியது (ஆறு சம்பவங்கள்).
- தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை உறுதி செய்தல் பாலியல் இலஞ்சத்தின் மூன்று சம்பவங்களுக்கு வழிகோலியது.
- தலைமைத்துவ வகிபாகங்களை எடுக்கும் மற்றும் சமுதாய அபிவிருத்தியில் செயற்றிறனுடன் ஈடுபட்டுள்ள பெண்களும் இலக்கு வைக்கப்பட்டனர் (3 சம்பவங்கள்).

**பாலியல் இலஞ்சத்தின் வகைகள்**

- மதுவருந்திய நிலையில் இராணுவக் கணவரை இழந்த பெண்ணின் வீட்டிற்கு இரவில் விஜயம் செய்தல் மற்றும் பாலியல் விருப்புக்களை கோரல்
- பாலியல் தொந்தரவு மற்றும் பொருத்தமற்ற உடல்சார் நடத்தை

- உறவை ஆரம்பிக்க நிர்ப்பந்தித்தல்
- ஒரு முறை உடலுறவு கொள்வதற்கு நிர்ப்பந்தித்தல்
- தொலைபேசியூடாக தொடர்ச்சியான பாலியல் பலாத்காரம்
- மாலை நேரத்தில் அலுவலகத்திற்கு வெளியே அல்லது அவருடன் சுற்றுலா செல்வதற்கு தனியாக சந்திக்குமாறு கணவரை இழந்த பெண்ணிடம் கோரல்
- குறிப்புணர்த்தும் கருத்துக்கள், பாலியல் அவமதிப்பு என்பவற்றுடன் குறித்த இடைவெளிகளில் நெருக்கமான ஆராய்ச்சிக்குரிய விசாரிக்கும் கேள்விகள் என்பவற்றிற்கு ஆளாதல்
- பாலியல் இலஞ்சம் மறுக்கப்படும் போது அல்லது தவிர்க்கப்படும் போது வாய்மூல அச்சுறுத்தல்கள் மற்றும் தாமதிக்கும் உத்திகள்.

பாலியல் இலஞ்சத்தின் எந்தவொரு கோரிக்கைக்கும் உண்மையில் இணங்குவதற்கு எந்தவொரு கணவரை இழந்தப் பெண்ணும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், ஒரு பெண் மாத்திரம் வேறு வழிதெரியாமல் அது குறித்து சிந்தித்து வருகின்றார்.

பாலியல் செயற்பாட்டினை எதிர்த்த பெரும்பாலான நேர்காணப்பட்டவர்கள், ஒரு அபாயகரமான நிலையை தடுப்பதற்கு /சாதுரியமாக தப்புவதற்கு/ தணிப்பதற்கு தாம் பயன்படுத்திய பல்வேறு பயனுள்ள உத்திகளை பகிர்ந்துகொண்டனர். அத்தகைய உத்திகள் பரந்துபட்டனவாக அமைந்ததுடன், அவற்றில் சில ஏனையவற்றை விட பயனுள்ளதாக இருந்தன:

- தாம் நாடிய சேவை அல்லது உதவியை கைவிடல்
- குற்றம் புரிந்தவருக்கு நன்றாக திட்டுதல்
- அவரை அடித்தல்
- முறைப்பாடு ஒன்றை செய்தல்
- தவிர்த்தல்
- கைபேசி இலக்கத்தை மாற்றல்
- நண்பரின் முகவரியைப் பயன்படுத்தல்
- கருணை நிறைந்த இராணுவ அதிகாரிகளிடம் உதவி கோரல்
- அபாயகரமான இடங்களுக்கு தம்முடன் வருமாறு குடும்பத்தின் ஆண் உறுப்பினரிடம் கேட்டல்
- அவர்கள் சார்பில் முன்வருமாறு ஆண் குடும்ப உறுப்பினரிடம் கேட்டல்.

**நிவாரணம் அல்லது நட்டஈடு நாடுவதற்கு பெண்கள் தவறுவது ஏன்?**

பெண்கள் முறைப்பாடு செய்யாமைக்கான இரண்டு பிரதான காரணங்களாவன

1. கடன் உறுதி செய்வதில் தாமதப்படுத்தல், முக்கியமான ஆவணங்கள் 'காணாமல் போதல்', பணம் வெளியிடலை தடுத்தல், மனநல காப்பகத்திற்குச் செல்ல ஆற்றுப்படுத்தல், பின்தொடரல், கணவரை இழந்த பெண்களையும், அவர்களுடைய பிள்ளைகளையும் அச்சுறுத்தல் மற்றும் தீங்கு விளைவித்தல் போன்ற வடிவங்களில் இராணுவம் மற்றும் அரசாங்க அதிகாரிகள் பழிவாங்குதல் குறித்த பயம்.

> "ஒட்டுமொத்த ஆண் இனம் மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்கள் எம்மை தொந்தரவுக்கு உள்ளாக்கினர்."

2. சமூக களங்கம் ஏற்பட்டுவிட்டால் மரியாதை மற்றும் மதிப்பினை இழந்துவிடுவார்கள் என்ற பயம்: 'முறைப்பாட்டினை முன்வைக்கும் பெண்ணே, அத்தகைய பாலியல் தேவைகளுக்காக அழைத்ததாக குற்றம் சுமத்தப்படுவர்'என பல பெண்கள் குறிப்பிட்டனர். சில இராணுவக் கணவரை இழந்த பெண்கள் தமது பிள்ளைகள், கணவரின் வீட்டார் போன்றோர் இந்த சம்பவங்கள் குறித்து அறிந்து கொண்டு, தாம் தொடர்பில் குறைத்து மதிப்பிடுவார்கள் என அவர்கள் வருந்துகின்றனர்.

தம்மை நம்ப மாட்டார்கள் என பெண்கள் கருதியனார்கள், ஏனெனில்:

- அவர் வறியவர் மற்றும் அதிகாரம் இல்லாதவர்
- மிக இளையவர்களால் அவர்கள் அணுகப்படுகின்றனர்.
- 'எனக்கு எதிரான அவருடைய சொல்' என்ற சம்பவமாக இருக்கும்
- 'அக்கறையின்மை மற்றும் ஆர்வமின்மையுடன்' முறைப்பாடுகள் நடத்தப்படுகின்றன
- 'பானையிலிருந்து, அடுப்பில் விழுவது போலாகிவிடும்' என பெண் ஒருவர் கருதினர். அதாவது மேலும் சிக்கலுக்கு உள்ளாக கூடிய நிலைமை
- முறைப்பாட்டினை பதிவு செய்யும் பொலிஸ் அதிகாரி அல்லது இராணுவ அதிகாரிகயினால் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக நேரிடல்
- சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் ஊழல் நிறைந்தவர்கள் மற்றும் எப்போதும் பாலியல் குற்றம் புரிபவர்கள் என்ற கருத்தே பெண்கள் மத்தியில் பொதுவாக உள்ளது.
- உதவி மற்றும் நட்டஈட்டிற்காக தாம் விண்ணப்பிக்கக்கூடிய சுயாதீன, அரச சார்பற்ற அதிகாரிகள் குறித்து பல பெண்கள் அறிந்திருக்கவில்லை.
- மனித உரிமைகள் ஆணைக்குழு குறித்து அறிந்திருந்த போதிலும், அதில் சென்று எவ்வாறு முறைப்பாடு செய்வது என தெரியவில்லை என ஒரு பெண் குறிப்பிட்டார்.
- பலாத்காரம் தொடர்பான இழிநிலையான தகவல்கள் பகிரங்கபடுத்தப்பட்டால் தமது பிள்ளைகள் கேலிக்குள்ளாக்கப்பட்டு, அவமதிக்கப்படலாம் என பெரும்பாலான பெண்கள் கரிசனை கொண்டிருந்தனர்.
- தமது முறைப்பாடுகள் உயிரிழந்த கணவர் மீது அல்லது இராணுவத்தின் மீது தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தலாம் என சிலர் பயந்தனர்.
- சட்ட முறைமையின் ஊடாக ஏதேனும் உதவியைப் பெற முடியும் என்பதில் பெரும்பாலான நேர்காணப்பட்டவர்கள் ஐயம் கொண்டிருந்தனர். ஏனெனில் அதற்கு அதிகளவு நேரமும், பணமும் தேவையாகும். 'இந்த நாட்டின் சட்டத்தின் மீது எனக்கு நம்பிக்கை இல்லை... முறையான சட்டங்களும், ஒழுக்கக் கோவைகளும் இந்த நாட்டில் இருப்பின், எம்மைப் போன்ற பாதிப்புக்குள்-ளாக்கப்படக் கூடிய பெண்களை இந்த வகையில் மக்கள் நடத்தமாட்டார்கள்' என ஒரு பெண் குறிப்பிட்டார்.
- தனிநபர்கள் என்பதிலும் பார்க்க ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க முடியுமாயின் நட்டஈட்டுக்கான சட்ட வழிமுறையை பயன்படுத்த இரண்டு பெண்கள் தயாராக இருந்தனர்.
- தம்மால் அனாமேதயமாக செய்ய முடியுமாயின் தம்மீது பாலியல் குற்றம் புரிந்தவருக்கு எதிராக சாட்சியமளிக்க தயாராக இருப்பதாக இன்னொரு பெண் தெரிவித்தார்.
- 'இவ்வாறான ஆண்களுக்கு தண்டனை அளிப்பதில்பயனில்லை...மனிதநேயத்துடன் எவ்வாறு நடந்து கொள்வது என அவர்களுக்கும் கற்பிக்க வேண்டும்' என்ற கருத்தினை மற்றொரு பெண் கொண்டிருந்தார்.

# பரிந்துரைகள்

- பாலியல் மனநிறைவிற்கு, மேலதிகமான அபராதங்களை வழங்குவதற்கு இலஞ்ச சட்டம் திருத்தப்படல் வேண்டும்.
- அத்தகைய அபராதங்கள் மற்றும் தாம் அணுகக் கூடிய ஏனைய சட்ட நடவடிக்கைகளை பயன்படுத்தி எவ்வாறு நன்மை பெற முடியும் என பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு விழிப்புணர்வு வழங்க வேண்டும்.
- சட்ட நடவடிக்கைகளை எடுக்க விரும்பும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கல்.
- இராணுவ அதிகாரிகள் உள்ளடங்கலாக அனைத்து அரச அதிகாரிகளுக்கும் பாலியல் இலஞ்சம் குறித்த நன்னடத்தை கோவை ஒன்று உருவாக்கப்பட்டு, அனைத்து அரசாங்க அலுவலகங்களிலும், மூன்று மொழிகளிலும் தெளிவாக காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.
- அனைத்து அரசாங்க அலுவலகங்களிலும் பாலியல் இலஞ்சம் குறித்து முறைப்பாடுகள் செய்வதற்கு பாதிக்கப்பட்ட பெண்களை ஊக்குவிக்கும் ஆதரவான பாதுகாப்பான சூழல் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.
- மனித உரிமைகள் ஆணைக்குழவினால் அரச துறைக்குள் பாலியல் இலஞ்சம் சார்ந்த முறைப்பாடுகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த வழிகாட்டிகள் வடிவமைக்கப்பட்டு அனைத்து அரசாங்க அலுவலகங்களுக்கும் வழங்கப்படல் வேண்டும்.
- மனித உரிமைகள் ஆணைக்குழவிற்குள் பாலியல் இலஞ்சத்தினை கையாள்வதற்கு விசேடமான, பால்நிலை கூருணர்வான, முறைப்பாட்டு நடைமுறை ஒன்று அமைக்கப்படல் வேண்டும்.



- பாலியல் இலஞ்சத்தின் சம்பவங்களின் தரவுத்தளம் ஒன்றினை அனைத்து அரசாங்க அலுவலகங்களும் பேண வேண்டும். அத்தகைய சம்பவங்கள் விசாரிக்கப்பட்டு, பாலியல் குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்படுவதனை உறுதி செய்வதற்கு அத்தகையசம்பவங்களின்வருடாந்தகணக்காய்வு நடத்தப்படல் வேண்டும்.

- பாடசாலை மட்டத்தில் இருந்து விழிப்புணர்வு பிரசாரம் ஒன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும். பாலியல் இலஞ்சத்தைப்பற்றி மாத்திரம் கலந்துரையாடாது, அத்தகைய விடயங்களை வெளிக்கொணர முயற்சிக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் களங்கப்படுத்தல் பற்றியும் கலந்துரையாட வேண்டும்.

- பெண்களை, குறிப்பாக கணவரை இழந்த பெண்கள் தொடர்பாக இராணுவ அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் ஒட்டு மொத்தமாக சமூகத்தின் மத்தியில் மனப் பாங்கு மாற்றம் ஒன்று தேவை

- இலங்கையில் அரச மற்றும் தனியார் துறைகள் இரண்டிலும் பரந்துபட்டுள்ள பாலியல் இலஞ்சம் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்க வகிபாகம் ஒன்றினை ஊடகத்துறை வகிக்க வேண்டும்.

- பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான சேவைகளை நிர்வகிப்பதற்கு கூடுதலான பெண் அதிகாரிகள் நியமிக்கப்படல் வேண்டும்.

- பிராந்திய அலுவலகங்கள் அமைக்கப்படல் வேண்டும். இதனால் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பல்வேறு விடயங்களைச் செய்வதற்காக கொழும்புக்கு விஜயம் செய்ய வேண்டியதில்லை. இதனால். ஆண்களுடன் செல்வதற்கும், தமக்காக மத்தியஸ்தம் செய்வதற்கும் ஆண்களில் தங்கியிருக்கவோ, அந்த செயற்பாட்டில் அவர்களுக்கு பாலியல் இலஞ்சம் கொடுப்பதற்கோ பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தேவையேற்படாது.

- இராணுவக் கணவர் உயிரிழந்தவுடன், அவருடைய மனைவிக்கு உயிரிழந்த கணவரின் சம்பளத்தை வழங்குவதற்கு எளிய, உடனடியான மற்றும் வினைத்திறன் மிக்கச் செயன்முறை அமைக்கப்படல் வேண்டும். இதன் மூலம் அவர் மரணச்சடங்குக்கான செலவுகளை செய்யவும், தமது குடும்பத்தினை பார்த்துக் கொள்ளவும், கடன் மீள்கொடுப்பனவை செய்வதற்கும் இயலுமாக இருக்கும்.

- இராணுவத்தில் இருந்து சுயாதீனமான, பொருளாதார மற்றும் உளவியல் சார்ந்த உளவளத்துணை நிலையங்கள் அமைக்கப்படல் வேண்டும். எனவே, தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அந்தரங்கமாக இராணுவக் கணவரை இழந்த பெண்கள் பகிர்வதுடன் அவற்றை கையாள்வதற்குரிய ஆலோசனைகளை பெற முடியும்.

- உயிரிழந்த இராணுவ அதிகாரியின் பிள்ளைகளுக்கு உளச்சமூக உளவளத்துணையும் வழங்கப்படல் வேண்டும்.

- பாலியல் இலஞ்ச நிலைமைகளை சாதுரியமாக தவிர்க்கும் வழிமுறைகளை கண்டறிவதற்கு இராணுவக் கணவரை இழந்த பெண்கள் உளரீதியாக வலுப்படுத்தப்படல் வேண்டும்.

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்
325 ஏ1, திம்பிரிகஸ்யாய வீதி கொழும்பு 05. இலங்கை.
தொலைபேசி/ தொலைநகல்: 94 11 2055404